தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2025

**17 வயதுப்பிரிவு**
(01.01.2008 – 31.12.2009 வரையில் பிறந்தோர்)

## கேணல் தமிழேந்தி

கேணல் தமிழேந்தி அவர்களைத் தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளராகத்தான் எம்மில் பலருக்குத் தெரியும். அதையும் தாண்டி தமிழ் மொழிக்காக அவர் ஆற்றியபணிகள் உன்னதமானவை. அரச வங்கியொன்றில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். எளிமை, உண்மை, நேர்மை, கடமை, நேரந்தவறாமை போன்ற பண்புகளுக்குச் சொந்தக்காரர். அதனால், தமிழீழத் தேசியத்தலைவரால் நிதித்துறைப் பொறுப்பாளர் என்ற பெரும்பணி அவருக்கு வழங்கப்பட்டது.

தேசியத்தலைவரை ‘தம்பி’ என அன்போடு அழைக்கும் தமிழேந்தி அவர்கள் தேசியத்தலைவரின் சிந்தனைகளை உள்வாங்கி நிதித்துறையை நிர்வகித்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அடுத்தகட்ட நகர்வுகளையும் வளர்ச்சிகளையும் போராளிகளின் நலன்கள் பற்றிய சிந்தனைகளையும் முன்னிறுத்தி, நிதித்துறையின் விரிவாக்கத்தினையும் வருவாயினைக் கூட்டுகின்ற வழிவகைகளை ஆராய்வதிலுமே எப்போதும் அவர் ஈடுபட்டிருப்பார்.

வணிக நிறுவனங்கள், தமிழீழ வைப்பகம், கால்நடைப் பண்ணைகள், அரிசி ஆலைகள், வேளாண்மைச் செய்கை, கனி தரும் மரங்கள் மற்றும் காய்கறிப் பண்ணைகள், உற்பத்தி நிலையங்கள், வெதுப்பகம், சுவையகம், தமிழீழப் போக்குவரத்துக்கழகம், ஊர்திப் பேணுகை நிலையம், கடலுணவு வணிகம், பதிப்பகம், வருவாய்ப்பகுதி, புகைப்படக்கலையகம், பெருந்தோட்டப்பகுதி என எந்தெந்த வழிகளில் நிதியீட்டம் செய்யலாமோ அத்தனை வழிகளிலும் அத்திவாரம் போட்டு அதில் அறுவடை செய்த ஆளுமை.

தமிழ்மொழி, தமிழர் வரலாறு பற்றிப் போராளிகளுக்கு வகுப்புகள் எடுத்தவர். வணிக நிலையங்களுக்குத் தமிழ்ப்பெயர் மாற்றத்தில் தொடங்கி குழந்தைகளுக்கு தமிழ்ப்பெயர் சூட்ட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டவர். நாற்பத்து ஆறாயிரம் தமிழ்ப்பெயர்களைக் கொண்ட தமிழ்ப்பெயர் நூலினை பண்டிதர் பரந்தாமனின் உதவியுடன் வெளியிட்டவர். அதனைத் தொடர்ந்து பத்தாயிரம் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பெயர் மாற்றம் செய்யும் பணியினை ஆரம்பித்து அதனை வெற்றிகரமாகச் செய்து முடித்தவர்.

தமிழீழ நிகழரசின் நிதி சார்ந்த கட்டுமானங்கள் அனைத்தையும் தூரநோக்குடன் செம்மையாக உருவாக்கிய கேணல் தமிழேந்தி அவர்கள், கிளிநொச்சியில் ஒரு பகுதியை ‘அறிவியல் நகர்’ எனப் பெயர் சூட்டி, அங்கு தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றிற்கான கட்டுமானத்தை உருவாக்கினார். அந்தப் பல்கலைக்கழகக் கட்டடத்தில் இன்று பொறியியற்பீடம் இயங்கிவருகிறது. முதன்முதலாக ‘படைத்துறை செயலர்’ என்னும் பொறுப்பு கேணல் தமிழேந்தி அவர்களுக்கு தலைவரால் வழங்கப்பட்டது.

கேணல் தமிழேந்தி அவர்கள் போராளிகளினதும் மக்களினதும் நலன்பேணும் திட்டங்களைச் செயற்படுத்தி, தமிழீழத் தேசியத்தலைவரின் சிந்தனைக்கமைய, மாவீரர்களின் ஈகத்தின் வழிநின்று இறுதிவரை போராடி, 10.03.2009 அன்று வீரகாவியமானார். தமிழீழத் தாய்நாட்டை மீட்டு, அவரது உயரிய திட்டங்களைச் செயற்படுத்துவோம்.

“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”